Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 139/2024**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இருதயம் | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னப்பன் சூசை | தொழில் | : | மேலாளர், கூட்டுறவுத்துறை |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடியில் குடியிருந்துகொண்டு தமிழ்நாடு கூட்டுறவுத்துறையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 13.06.2024 ஆம் தேதி எங்கள் ஊரில் புனித அந்தோனியார் திருவிழா நடைபெற்றது. அந்த திருவிழாவை நான் தான் நடத்தினேன். அன்றையதினம் மதியம் சுமார் 02.30 மணியளவில் அந்தோனியார் கோவிலில் குத்துப்பாட்டு போட்டு எதிரிகளுடன் மற்ற நபர்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். அப்போது நான் அங்கு சென்று இது கோவில் அதனால் இந்த மாதிரி குத்துப்பாட்டு போட்டு ஆடக்கூடாது என்று சொல்லிவிட்டு, அந்த பாட்டு போட்ட மைக் செட்டில் இருந்த பென்டிரைவ்வை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். எனது வீடு சர்ச்சிக்கு அருகில் ஒரே காம்பவுண்டில் தான் உள்ளது. அன்றையதினம் மாலை 05.30 மணியளவில் எதிரி நாகராஜன் மது அருந்திவிட்டு உன்னை வெட்டாமல் விடமாட்டேன் தாயோலி என்னு திட்டினார். அப்போது அந்த கோவிலின் பங்குத்தந்தை சௌந்தரம் என்பவர் சம்பவத்தை பார்த்துவிட்டு நாகராஜன் எதற்காக சத்தம் போடுகிறார் என்று என்னிடம் கேட்டார். அப்போது நான் அவரிடம் எதிரிகள் குத்துப்பாட்டு போட்டு ஆடினார்கள். அதனால் நான் பென்டிரைவ்வை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்று

சொன்னேன். அன்றையதினம் 06.00 மணிக்கு கோவிலில் கொடி இறக்கம் நடைபெற்றது. அதன்பின்பு இனிப்பு வழங்குவதற்காக எனது வீட்டிற்கு சென்று பேப்பர் பிளேட் எடுத்துவிட்டு வந்தபோது எதிரிகள் நாகராஜன், சேவியரும் எனது வீட்டிற்குள் வந்து சேவியர் என்னை பிடித்து தள்ள, நாகராஜன் இடுப்பில் வைத்திருந்த கிளி மூக்கு அறுவாளால் எனது இடது பக்க அக்குளுக்கு மேல் பகுதியில் வெட்டியதில், எனக்கு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. அறுவாளால் நாகராஜ் என்னை வெட்ட முற்பட்ட போது அதை நான் தடுத்தேன். அதில் எனக்கு வலது கையின் உட்பகுதியில் வெட்டு பட்டு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. அப்போது அருகில் இருந்த எனது தங்கை கனகுமேரி, மற்றும் செலினா மேரி ஆகியோர்கள் வந்தவுடன் எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். நான் காயம்பட்டவுடன் கன்னிவாடி காவல்நிலையம் சென்றோம். அப்போது அங்கிருந்த போலிசார் முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறும், அங்கு வந்து புகார் வாங்கிக்கொள்வதாக சொன்னார்கள். அன்றையதினம் நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது கன்னிவாடி போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்தபோது நான் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 139/2024**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகமேரி | ஜாதி | : | |
| த/பெ | : | சின்னப்பன் சூசை | தொழில் | : | வீட்டுகுடித்தனம் |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 54/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடியில் குடியிருந்துகொண்டு வீட்டுகுடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா.1 இருதயராஜ் எனது அண்ணன். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் அந்தோனியார் திருவிழா நடைபெற்றது. அந்த திருவிழாவிற்கு அ.சா.1 னான இருதயராஜ் அன்றையதினம் சுமார் 05.30 மணிக்கு மேல் இனிப்பு வழங்குவதற்காக அவரது வீட்டிற்கு சென்று பேப்பர் பிளேட் எடுத்துக்கொண்டு வந்தபோது, அப்போது எதிரி நாகராஜ் அறுவாளை எடுத்து வந்து கழுத்து, கை ஆகிய இடங்களில் வெட்டினார். அதை பார்த்துவிட்டு நான் கத்தினேன். அப்போது அருகில் இருந்த நபர்கள் வந்துவிட்டார்கள். அதன்பின்பு எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 139/2024**

**Deposition of PW.3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செலினா மேரி | ஜாதி | : | |
| த/பெ | : | வனத்தான் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | கன்னிவாடி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர். 3வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது )

**முதல் விசாரணை**

நான் கன்னிவாடியில் குடியிருந்துகொண்டு கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 இருதயராஜை எனக்கு தெரியும். எதிரிகளையும் எனக்கு தெரியும். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் எங்கள் ஊரில் அந்தோனியார் திருவிழா நடைபெற்றது. அன்றையதினம் சுமார் 05.30 மணிக்கு இனிப்பு வழங்குவதற்காக அ.சா. இருதயராஜ் அவரது வீட்டிற்கு சென்று பேப்பர் தட்டு எடுத்துக்கொண்டு வந்தபோது எதிரிகள் அங்கு சென்று சண்டை போட்டு எதிரி நாகராஜன் அறுவாளால் அ.சா.1 இருதயராஜை இடது பக்க விலாவிற்கு மேல் பகுதியில் குத்தியதில் அவருக்கு காயம் ஏற்ட்டு ரத்தம் வந்தது. நான் சம்பவத்தை பார்த்துவிட்டு உடனே வந்து காயம்பட்ட அ.சா.1 இருதயராஜை மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு சென்றுவிட்டோம். அன்றையதினம் சம்பவ இடத்தில் வைத்து கன்னிவாடி காவல்நிலையத்தில் இருநது வந்த போலிசார் அந்த இடத்தில் சண்டை நடந்தது சம்மந்தமாக விசாரித்து என்னிடமும், மற்றொரு நபரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.3)** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. என்னுடன் சேர்ந்து மற்றொரு நபர் கையெழுத்து செய்தார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor